## அருளாலயத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை!

# குன்றக்குடி அடிகளார் மண்டபத்தில் நூற்றாண்டு விழா கல்வெட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சிவகங்கை,ஜன.31-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் உள்ள அருளாலயத்தில் நிறுவப்பட்டுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து, தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா கல்வெட்டினை திறந்து வைத்து, அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

சமயம், இலக்கியம் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய உலகில் பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசைத்திறன் போன்ற பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர், நூல்கள் பல படைத்துள்ளவர், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைவராகத் திகழ்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை சிறப்பிக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால், 2025-26 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா சிவகங்கை மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் உள்ள அருளாலயத்தில் நிறுவப்பட்டுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

பின்னர், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபத்திற்கு சென்று, தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா கல்வெட்டினை திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, அம்மணிமண்டபத்திலுள்ள புகைப்படங்களை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து "சட்டமேலவையில் அடிகளார்" மற்றும் "அடிகளார் அருட்நெறிச் சுவடுகள் - 100" ஆகிய நூல்களை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா. பொற்கொடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) சிவகங்கை மாவட்டம், குன்றக்குடியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவினையொட்டி "அடிகளார் அருட்நெறிச் சுவடுகள் – 100 நூலினை வெளியிட்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி–கழனிவாசலில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள வீறுகவியரசர் முடியரசன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.





கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.1.2026) முகாம் அலுவலகத்தில், கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



நேற்று (30.1.2026) சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருதிரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## வலுவான மாநிலங்கள், சுயமரியாதை உணர்வுள்ள மக்கள் என அனைவருக்கும் சம வாய்ப்புகள்!

# வலுவான இந்தியாவுக்கான பாதை திராவிட மாடலே !

## சென்னையில் நடைபெற்ற என்.டி.டி.வி. தமிழ்நாடு மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை,ஜன.31-**

**சென்னை ஐ.டி.சி. கிராண்ட் சோழாவில் நடைபெற்ற என்.டி.டி.வி. (NDTV) தமிழ்நாடு மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்**

**அப்போது அவர், ``சமூக நீதி, மாநில உரிமைகள், சுயமரியாதை ஆகியவற்றை வேர்களாக கொண்ட திராவிடத்தின் அவசியத்தை நாடு உணரத் தொடங்கியுள்ளது. அதன்படி, இந்தியா இதற்கு முன்பை விட வலுவாக எழும். வலுவான மாநிலங்கள், சுயமரியாதை உணர்வுள்ள மக்கள், அனைவருக்கும் சம வாய்ப்புகள் - இதுவே திராவிட மாடல், இதுவே வலுவான இந்தியாவுக்கான பாதை" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கம்.

என்.டி.டி.வி. (NDTV) தமிழ்நாடு மாநாட்டில், இத்தகைய சிறப்புக்குரிய அவையோர் முன்னிலையில் உரையாற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், இந்த மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

### திராவிட கருத்தியல்

வரவிருக்கும் தேர்தல் தமிழ்நாட்டிற்கு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் இது திராவிடத்திற்கும் பாசிச சக்திகளுக்கும் இடையிலான போராக இருக்கப்போகிறது. திராவிட கருத்தியல் என்பது அனைவராலும் கடைப்பிடிக்கப்பட்டால், அது இந்தியாவை இன்னும் வலிமையாக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

பேரறிஞர் அண்ணாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க வரிகளை இந்த அவையில் நினைவுகூர்கின்றேன்.

``நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். என்னை `திராவிடன்' என அழைத்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். எங்களிடம் இந்த உலகத்துக்கு வழங்க திட்டவட்டமான, தெளிவான மற்றவைகளிடமிருந்து வேறுபட்ட சில திடமான, தனித்துவமான கொள்கைகள் உள்ளன என நம்புகிறேன்."

இவை வெறும் வார்த்தைகளோ முழக்கமோ அல்ல. இது சுயமரியாதைக்கான பிரகடனம், சமூக நீதி மற்றும் மாநில உரிமைகளுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பின் வெளிப்பாடு. ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சேர்ந்த மக்களின் விருப்பத்தின் விளைவாக பிறந்த ஒரு கருத்தியல், முழு தேசத்தையும் எவ்வாறு வலுப்படுத்த முடியும் என்று உங்களில் பலர் என்னிடம் கேட்கலாம். இந்த கேள்வி எனக்கு ஆச்சரியமூட்டவில்லை.

### சமத்துவத்தின் மூலமான ஒற்றுமை

ஒன்றைத் தெளிவாகப் பதிவு செய்ய விருப்பப்படுகிறேன். திராவிட கருத்தியல் என்பது, பிரிவினையை தூண்டுவதல்ல. உண்மையில், அது பிரிவினைக்கு எதிரானது. திராவிடம் அனைவரையும் உள்ளடக்கியது . இது ஆதிக்கத்தால் விளையும் ஒருங்கிணைணைப்பை அல்ல, சமத்துவத்தின் மூலமான ஒற்றுமையையே வலியுறுத்துகிறது.

தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியபோது, சில சுயநலவாதிகள் அது தேச ஒற்றுமைக்கு எதிரானது என்று சித்தரித்தனர். ஆனால், அவர் சமூக நீதி காக்கும் திராவிட இயக்கத்துக்குத் தலைமை தாங்கி அதை தீவிரமாக முன்னெடுத்தார்.

### திராவிட இயக்கம்தான்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அரசு அலுவலகங்களில் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பின்தங்கிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடமே இல்லை. பெரும்பாலான வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள் உயர்சாதியினராகவே இருந்தனர். இந்தத் தடைகளைத் தகர்த்து, அவற்றை மக்கள்மயப்படுத்தியது திராவிட இயக்கம்தான்.

திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் சமூக நீதிக்காக குரல் எழுப்பியது. தந்தை பெரியாரும் டாக்டர் அம்பேத்கரும் சமூக நீதி மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் ஒரே மாதிரியான பிடிப்பை




கொண்டிருந்தனர். அவர்கள் காட்டிய கொள்கை வழியில், எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மண்டல் ஆணைய அறிக்கையை அமல்படுத்துவதில் உறுதியாக நின்றார்.

பலமான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், முன்னாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுடன் இணைந்து மண்டல் ஆணைய பரிந்துரைகளை அமல்படுத்தினார் கலைஞர். அதுமட்டுமின்றி 2007-இல், தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசு, இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தியது. இதன் மூலம் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் பயனடைந்தனர்.

### சமூக நீதித் தலைநகரம்

மும்பை இந்தியாவின் பொருளாதார தலைநகராகவும், டெல்லி நிர்வாகத் தலைநகராகவும் இருப்பது போல, தமிழ்நாடு இந்தியாவின் சமூக நீதித் தலைநகராக திகழ்கிறது. நாங்கள் எப்போது மாநில உரிமைகளைக் கோரினாலும், டெல்லியில் உள்ள ஆட்சியாளர்கள் அதைத் தேச விரோதமனதாக சித்தரிக்கிறார்கள். `மாநிலத்தின் கல்வி உரிமையில் ஒன்றிய அரசு தலையிடக் கூடாது' என்று நாம் சொன்னால், பா.ஜ.க. கோபப்படுகிறது. `சுகாதாரத் துறையில் ஆக்கிரமிப்பு செய்யாதீர்கள்' என்று சொன்னால் பா.ஜ.க. எரிச்சலடைகிறது.

மாநில அரசுகளின் அல்லது மக்களின் விருப்பத்தைப் பற்றி கவலைப்படாமல், எதையும் திணிக்கலாம் என்று ஒன்றிய அமைச்சர்களும், ஆளுநர்களும் நினைக்கிறார்கள். ஆனால், ``மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்ற முழக்கம் அரசியல் லாபத்துக்காகச் சொல்லப்பட்ட ஒன்றல்ல. உண்மையில், மாநில சுயாட்சியும் மொழி உரிமையும்தான் தி.மு.க.வின் உயிர்.

1971-இல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் ஒன்றிய-மாநில உறவுகளை மறுவரையறை செய்ய குழு ஒன்றை அமைத்தார். 2025-இல், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய-மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகளை ஆய்வு செய்ய உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளார். வெளியுறவு, பாதுகாப்பு, மாநிலங்களுக்கு இடையேயான தொடர்பு மற்றும் நாணயம் ஆகியவற்றைத் தவிர, மற்ற அனைத்தும் மாநிலப் பட்டியலிலேயே இருக்க வேண்டும் என்று தி.மு. கழகம் வலியுறுத்தி வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்த தேவைகளும் சவால்களும் உண்டு. உதாரணமாக, தமிழ்நாடு அதிக அளவில் நகர்மயமாக்கப்பட்ட அதே நேரத்தில் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம். ஆனால், தேசிய அளவில் திட்டங்களை வகுக்கும் போது மாநிலங்களின் கருத்துக்கள் கேட்கப்படுவதில்லை. இதனால், `ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வுத் திட்டங்கள்' பலன்களை விட மாநிலங்களுக்குப் பாரத்தையேத் தருகின்றன.

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் காரணம்

புதிய தேசியக் கல்விக் கொள்கை மூலம் இந்தி மற்றும் சமஸ்கிருதத்தைத் தமிழ்நாட்டின் மீது மறைமுகமாகத் திணிக்க முயல்கிறார்கள். 1968-இல் பேரறிஞர் அண்ணா வழங்கிச்சென்ற இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணம். 1960களில், அலுவல் மொழியாக ஆங்கிலத்தை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, தி.மு.க. இந்தி திணிப்புக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடங்கியது. நமது கழகத் தொண்டர்கள், குறிப்பாக மாணவர்கள், அதை மக்கள் இயக்கமாக மாற்றி, மொழி வெறியை வெற்றிகரமாக தடுத்தனர். நமது சமூக நீதி மற்றும் மொழிக் கொள்கைகளின் விளைவுகள் இன்று தெளிவாகத் தெரிகின்றன.

திராவிட மாடல் மீதும், இருமொழி கொள்கை மீதும், கேள்வி எழுப்புபவர்களுக்கு நமது சாதனைகளே பதிலாக அமைகின்றன. இந்தித் திணிப்பு தமிழ் மொழிக்கு மட்டும் அச்சுறுத்தல் அல்ல. அது ஏற்கனவே வட மாநிலங்களில் பல மொழிகளை உண்டு செரித்துவிட்டது . அதனால்தான், நம் மாண்புமிகு முதலமைச்சர் இந்தித் திணிப்புக்கு எதிராக உயர்த்திய குரல், நாடு முழுவதும் எதிரொலித்தது.

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய 3,500 கோடி ரூபாய் கல்வி நிதியை, இன்னும் ஒன்றிய அரசு வழங்கவில்லை. 10,000 கோடி ரூபாய் தருவதாக இருந்தாலும், தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்காது என்று முதலமைச்சர் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

கல்வி நிதி மட்டுமல்ல, இயற்கைச் சீற்றங்களின் போது தரவேண்டிய நிவாரண நிதியைக் கூட ஒன்றிய அரசு முறையாக விடுவிப்பதில்லை. கடந்த 10 ஆண்டுகளில், தமிழ்நாடு கோரிய நிவாரண நிதியில் வெறும் 17 சதவிகிதத்தை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கி இருக்கிறது. மதுரை மற்றும் கோவை மெட்ரோ ரயில் திட்டங்கள், ஓசூர் விமான நிலையத் திட்டம் ஆகியவற்றிற்கு இன்னும் ஒப்புதல் இல்லை. மதுரை எய்ம்ஸ் (AIIMS) கட்டுமானத்தை எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக இழுத்தடித்து வருகின்றனர்.

இத்தனை இடையூறுகளுக்கு மத்தியிலும், நமது முதலமைச்சர் பல்வேறு சிறப்புவாய்ந்த மக்கள் நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார் விடியல் பயணம், பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்: 22 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். புதுமைப் பெண் & தமிழ்ப் புதல்வன்: மாதம் 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகை. நான் முதல்வன்: 30 லட்சம் மாணவர்களைத் தொழில்துறைக்குத் தயார்ப்படுத்துகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்: 1 கோடியே 31 லட்சம் பெண்களுக்கு மாதம் 1,000 ரூபாய். இரண்டு தினங்களுக்கு முன்பு, கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாட்டில் ஹெச்.பி.வி (HPV) தடுப்பூசி திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது.

### இதுதான் திராவிட மாடல்!

ஒன்றிய அரசு அதிகாரத்தை குவித்து, இன்று விசாரணை அமைப்புகளையும் ஆளுநர்களையும் தவறாகப் பயன்படுத்தி, ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைச் சீர்குலைக்கப் பார்க்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்குவதில்லை.

பா.ஜ.க. விரும்புவது ஒற்றைத்தன்மை கொண்ட இந்தியாவை, ஒற்றுமையான இந்தியாவை அல்ல. அவர்களின் நோக்கமெல்லாம் ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே உணவு, ஒரே தேர்தல் என்பதுதான். மாநிலங்களை பா.ஜ.க. அழிக்கத் துடிக்கிறது. எல்லா மாநிலங்களிலும் பொம்மை அரசுகளை அமைக்க விரும்புகிறது. அதன் மூலம் டெல்லியில் இருந்து ரிமோட் கண்ட்ரோல் மூலம் மாநிலங்களை இயக்க நினைக்கிறார்கள். அவர்கள் மாநிலங்களை நகராட்சிகளாக மாற்றப் பார்க்கிறார்கள்.

திராவிடம் இந்திய அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டாட்சிக் கொள்கைகளை குழைக்க முயலும் எந்த முயற்சியையும் தொடர்ந்து எதிர்க்கிறது. இதுவே பா.ஜ.க. திமுகவை அச்சுறுத்தலாகக் கருதுவதற்கான முக்கிய காரணம். எனவே, அவர்கள் எங்களை அடக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். பா.ஜ.க பல மாநில கட்சிகளை விழுங்கிவிட்டது.

சென்னைக்கு அண்மையில் வந்த ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி, `தமிழ்நாட்டிற்கு டபுள் எஞ்சின் தேவை' என்று கூறினார். நமது முதலமைச்சர் அதற்கு அவர்களின் `டப்பா எஞ்சின் தமிழ்நாட்டில் ஒருபோதும் ஓடாது' என்று பதிலடி கொடுத்தார். இதற்கெல்லாம் எதிராக திராவிட மாடலின் ஒற்றை எஞ்சின் மிகவும் சக்திவாய்ந்தது, பயனுள்ளது மற்றும் மக்களுக்கு உகந்தது.

### சாதனைகளின் பட்டியல்

திராவிட மாடல் அரசின் சில முக்கிய சாதனைகளை இங்கு பட்டியலிட விரும்புகிறேன்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது - 11.19 சதவீதம், இது நாட்டிலேயே அதிகம். தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்வோரின் மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) 52% ஆக உள்ளது - இது அமெரிக்காவை விட அதிகம், ஸ்காண்டிநேவிய நாடுகளுடன் ஒப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ரூ.17.23 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் தனி நபர் வருமானம் ரூ.3.58 லட்சமாக உள்ளது, இது தேசிய சராசரியை விட 1.74 மடங்கு அதிகம்.

ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்கள் தரவரிசையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 33 கல்லூரிகள் நாட்டின் முதல் 100 கல்லூரிகளில் இடம்பிடித்துள்ளன. இந்தியாவின் 11.2 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர், ஆனால், தமிழ்நாட்டில் வெறும் 1.43 சதவிகிதம் மக்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். இன்று தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த வேகத்தில் பயணிக்கும் நாம் 2030-ஆம் ஆண்டுக்குள் டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதை இலக்காகக் கொண்டுள்ளோம்.

திராவிட மாடல்

வரும் ஆண்டுகளில், திராவிட மாடல் தமிழ்நாட்டை, புதிய உயரங்களுக்கு அழைத்துச் செல்லும், வலுவான இந்தியாவைக் கட்டியமைப்பதில் முக்கிய பங்காற்றும். இந்நேரத்தில், பா.ஜ.க. தமிழ்நாட்டைக் கைப்பற்ற எடுக்கும் எந்த முயற்சியும் பலனளிக்கப் போவதில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு. கழகம் பாசிச சக்திகளை நிச்சயம் தோற்கடித்து, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறும்.

எங்களை பொறுத்தவரை சமதர்மமே அனைத்திற்கும் மேலானது. சமதர்மம் என்பது அனைவரும் சமமான சமூகம், நீதியை அடிப்படையாக கொண்டு வழிநடத்தப்படும் நிர்வாகம். இங்கு சாதி அடிப்படையிலான பாகுபாட்டுக்கு இடமில்லாதது. சமூக நீதி, மாநில உரிமைகள், சுயமரியாதை ஆகியவற்றை வேர்களாக கொண்ட திராவிடத்தின் அவசியத்தை நாடு உணரத் தொடங்கியுள்ளது. அதன்படி இந்தியா இதற்கு முன்பை விட வலுவாக எழும். வலுவான மாநிலங்கள், சுயமரியாதை உணர்வுள்ள மக்கள், அனைவருக்கும் சம வாய்ப்புகள் - இதுவே திராவிட மாடல், இதுவே வலுவான இந்தியாவுக்கான பாதை.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

என்.டி.டி.வியின் தலைமை நிர்வாக அலுவலர் ராகுல் கன்வால், தலைமை அனுபவ அலுவலர் ராகுல் ஷா, நிர்வாக இயக்குநர் வீர் ராகவ், மேலாண்மை ஆசிரியர் சிவ் அரூர், ஆசிரியர் (அரசியல்) வசுதா வேணுகோபால், மூத்த நிருபர், சாம் டேனியல், மூத்த அரசு அதிகாரிகள், பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.